மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழில்துறையில் பொற்காலம் படைத்து வரும் தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சிறப்பான ஆட்சியில் மகளிர் தொழில் துவங்க முன்வரவேண்டும், தாய்மார்கள் முன்வர வேண்டும் என்ற அடிப்படையில், ஆண்டு ஒன்றுக்கு 800 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட பயிற்சி பெற்ற தொழில் முனைவோர்கள், தாய்மார்கள் முன்வருவார்களானால், தொழில்பேட்டைகள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

125—

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம்.

*9012—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில் தற்போது இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவைப்படும் நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேலூர் தொகுதி கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணிக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, கட்டிட வேலை நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]